# ஆளுநர் ரவியை நீக்க வேண்டும்

## குடியரசுத் தலைவருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

**சென்னை, ஜூலை 9:** 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கும், ஜனநாயகத்துக்கும் எதிராகச் செயல்படும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவியிலிருந்து நீக்க வேண்டும்' என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

கடித விவரம்: ஆளுநர் ஆர்.என்.ரவி வெளிப்படையாக தமிழக அரசின் கொள்கைகளுக்கு முரணாகச் செயல்பட்டு, தமிழக அரசும், சட்டப்பேரவையும் செய்து வரும் பணிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறார். சட்ட மசோதாக்கள், கோப்புகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் தேவையில்லாமல் காலதாமதம் செய்து வருகிறார்.

**நாகாலாந்தில்...:** நாகாலாந்து ஆளுநராக ஆர்.என். ரவி பொறுப்பு வகித்தபோதும் அவரது செயல்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை. அந்தப் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்ட பிறகுதான் நாகாலாந்துக்கு நிம்மதி ஏற்பட்டதாக அந்த மாநிலத்தின் ஆளும் கட்சியான தேசியவாத ஜனநாயக முற்போக்கு கட்சியின் (என்.டி.பி.பி.) தலைவர் சிங்வாங் கொன்யாக் குறிப்பிட்டார்.

**அரசியல் போர்:** அதேபோல, 2021 செப்டம்பரில் தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்றது முதல் திமுக அரசுடன் கருத்தியல் மற்றும் அரசியல் போரில் ஈடுபட்டு வருகிறார்.

ஆளுநர் என்பவர் அரசியல் விருப்பு வெறுப்புகள், கட்சி அரசியல் அல்லது எதிர்கால நியமனங்கள் குறித்த எதிர்பார்ப்புகள் அற்றவராக இருக்க வேண்டும். ஆளுநர் அலுவலகம் என்பது அரசியல் சார்பற்றதாகவும், ஆளுநர் தனது செயல்பாடுகள்- பார்வையில் உண்மையாகவும் மதச்சார்பற்றவராகவும் இருக்க வேண்டும்.



ஏதோ ஒரு கட்சி அல்லது கருத்தியலின் நலனை வளர்ப்பதற்காக ஆளுநர் செயல்படக் கூடாது. ஆனால், ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் அவ்வாறு இல்லை.

மத்திய பாஜக ஆட்சியை எதிர்க்கும் ஒரு கட்சி மாநில ஆட்சியில் இருக்கும்போது, மாநிலத் தலைநகரில் அமர்ந்துகொண்டு, அந்த மாநில அரசை கவிழ்க்கும் வாய்ப்பைத் தேடும் ஆளுநரை மத்திய அரசின் முகவராகத்தான் கருத முடியும்.

**அமைதிக்கு அச்சுறுத்தல்:** ஆளுநரின் இத்தகைய செயல் கூட்டாட்சித் தத்துவத்தை சிதைத்து, இழிவுபடுத்தி, ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களையே அழித்து விடும். இதன் அடிப்படையிலான செயல்பாடுகளுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார்.

அரசியல்சாசனத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழக மக்களின் சேவைக்கும், நல்வாழ்வுக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கும், 159-ஆவது பிரிவின்கீழ் எடுத்த உறுதிமொழியை ஆர்.என். ரவி மீறி வருகிறார். வகுப்புவாத வெறுப்பைத் தூண்டிவிட்டு, மாநிலத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார்.

**ஆளுநரை நீக்க வேண்டும்:** அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்குத் தொடுக்க சிபிஐ வேண்டுகோள் விடுத்தும், அதற்கு அனுமதி தராமல் காலம் தாழ்த்திவரும் ஆளுநர், மறுபுறம் எனது அமைச்சர் ஒருவர் மீது வழக்கு விசாரணை தற்போதுதான் தொடங்கியுள்ள நிலையில், அவரை நீக்கம் செய்ய அவசரகதியில் செயல்படுவதன்மூலம் தனது அரசியல் சார்புகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்மூலம் ஆர்.என். ரவி ஒருதலைப்பட்சமானவர் மற்றும் ஆளுநர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்பதை நிரூபித்துள்ளார். அவர் உயர் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு தகுதியானவர்.

**குடியரசுத் தலைவரின் முடிவுக்கு...:** அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 156(1)-இல், குடியரசுத் தலைவர் விரும்பும் காலம் வரை ஆளுநர் பதவியில் இருப்பார் என்று உள்ளது. தமிழக மக்களின் நலன் கருதியும், தமிழக அரசின் நலன் கருதியும் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய முன்னோர்களின் உணர்வையும், மாண்புகளையும் பாதுகாக்கும் வகையில், ஆளுநர் போன்ற உயர்ந்த அரசியலமைப்புப் பதவியில் ஆர்.என். ரவி நீடிப்பது விரும்பத்தக்கதாகவோ அல்லது பொருத்தமானதாகவோ உள்ளதா என்பதை குடியரசுத் தலைவரின் முடிவுக்கே விட்டு விடுகிறேன் எனத் தெரிவித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின்.

**15 பக்க கடிதம்:** ஆளுநர் ஆர்.என்.ரவி தில்லி சென்றுள்ள நிலையில் குடியரசுத் தலைவருக்கு முதல்வர் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார். இந்தக் கடிதம் 15 பக்கங்களுக்கும் மேலாக எழுதப்பட்டுள்ளது.

## ஆளுநர் மீதான புகார்கள்

**குடியரசுத் தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுப்பியுள்ள கடிதத்தில் ஆளுநருக்கு எதிராக அடுக்கடுக்காக பல்வேறு புகார்களைத் தெரிவித்துள்ளார். அதன் விவரம்:**

### மசோதாக்கள் ஒப்புதலுக்கு காலதாமதம்

சட்டப்பேரவையில் இயற்றி அனுப்பிவைக்கப்பட்ட பல முக்கியமான சட்டமுடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் தேவையற்ற காலதாமதம் ஏற்படுத்தி வருகிறார். இது மாநில நிர்வாகத்தில் தலையிடுவதற்கும் பேரவை அலுவல்களில் தலையிடுவதற்கும் ஒப்பானது; அரசியலமைப்புக்கு முரணானது.

சென்னை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட குட்கா வழக்கில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்குத் தொடுக்க சிபிஐ கோரிய அனுமதியைக்கூட வழங்காமல், ஆளுநர் கிடப்பில் போட்டு வைத்துள்ளார்.

### அரசியல் பேச்சு

நாட்டின் மதச்சார்பற்ற கொள்கைகளில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை ஆளுநர் அடிக்கடி தனது பிளவுபடுத்தும் பேச்சுகளின் மூலம் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகிறார். அவரின் இதுபோன்ற செயல்கள், இந்திய அரசமைப்பின் 156 (1)-ஆவது பிரிவின்கீழ், அரசியலமைப்பை நிலைநிறுத்துவதற்கும், இணங்குவதற்கும் தான் ஏற்றுக் கொண்ட உறுதிமொழியை மீறியுள்ளதையே காட்டுகிறது.

### தமிழகத்துக்கு அவமதிப்பு

தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் 'தமிழ்நாடு' என்ற பெயரை, 'தமிழகம்' என்று மாற்றம் செய்ய வேண்டும் என்று ஏற்கவியலாத கருத்தை ஆளுநர் தெரிவித்தார்.

9.1.2023-இல் சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது, தமிழக அரசு தயாரித்த உரையில் இடம்பெற்றிருந்த சமூகநீதி, சுயமரியாதை, அனைவருக்குமான வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், மனிதநேயம் மற்றும் திராவிட மாடல் ஆட்சி போன்ற சொற்களை வாசிக்காமல் புறக்கணித்தார். இதன்மூலம், மாநிலத்தின் மற்றும் அரசின் நெறிமுறைகளை ஆளுநர் பகிரங்கமாக கேள்விக்குள்ளாக்கினார்.

பெரியார் ஈ.வெ.ரா., அம்பேத்கர், காமராஜர், அண்ணா, கருணாநிதி போன்ற தலைவர்களின் பெயர்களை ஆளுநர் குறிப்பிடாதது தமிழகம் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த நாட்டையும் அவமதிப்பதாகும்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக முதலீடுகளை ஈர்க்க கிழக்காசிய நாடுகளுக்கு முதல்வர் பயணம் மேற்கொண்டிருந்தபோது, வெளிநாட்டுப் பயணங்களால் முதலீடுகள் வருவதில்லை என்று ஆளுநர் குறிப்பிட்டார். இது கண்ணியமான ஆளுநர் பதவிக்கு அழகல்ல.

### முதல்வர் உரிமையில் தலையீடு

அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால், அவர் வகித்து வந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைகளை வேறு இரண்டு அமைச்சர்களுக்கு ஒதுக்கீடு செய்ய விரும்புவதாகவும், செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக தக்கவைக்க விரும்புவதாகவும் ஜூன் 15-இல் ஆளுநருக்கு கடிதம் எழுதினேன்.

இலாகா மாற்றத்தை ஏற்றுக் கொண்டு ஆளுநர் ஜூன் 16-இல் எழுதிய கடிதத்தில் செந்தில் பாலாஜி குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டு, இலாகா இல்லாத அமைச்சராக தொடர்வார் என்ற எனது பரிந்துரையை ஏற்க மறுப்பு தெரிவித்து கடிதம் எழுதினார். இது அமைச்சர்கள் நியமன விவகாரத்தில் 164(1) பிரிவுக்கு முரணாக ஆளுநர் செயல்படுகிறார் என்பதையே காட்டுகிறது.

மேலும், ஜூலை 29-ஆம் தேதி இரவு 7.45 மணியளவில் இந்திய அரசியலமைப்பின் 154, 163 மற்றும் 164- ஆவது பிரிவுகளை மேற்கோள் காட்டி, அமைச்சர் வி.செந்தில் பாலாஜியை உடனடியாக அமைச்சரவையில் இருந்து நீக்கியதாக ஆளுநர் குறிப்பிட்டார். திடீரென இரவு 11.45 மணியளவில் அதை நிறுத்திவைக்கும் மற்றொரு கடிதத்தையும் வெளியிட்டார். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் ஆளுநர் பதவியை அவர் சிறுமைப்படுத்துவதாக உள்ளது.

### தவறான தகவல்

சிதம்பரம் நடராஜர் கோயிலில் நடைபெற்ற குழந்தைத் திருமண வழக்கில் தவறான தகவல்களை ஆளுநர் தெரிவித்தார்.

EVA STALIN IA

# எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை தனியாரிடம் ஒப்படைக்க இஸ்ரோ முடிவு

**புது தில்லி, ஜூலை 9:** எடை குறைந்த செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்கான எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை முழுமையாகத் தனியாரிடம் ஒப்படைக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ முடிவெடுத்துள்ளது.

செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக ராக்கெட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை இஸ்ரோ எஸ்எல்வி-3, ஏஎஸ்எல்வி, பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி, எல்விஎம்-3, எஸ்எஸ்எல்வி ஆகிய 6 வகை ராக்கெட்டுகளை உருவாக்கியுள்ளது. அதில் எஸ்எல்வி-3, ஏஎஸ்எல்வி ஆகியவற்றுக்கு ஏற்கெனவே ஓய்வு அளிக்கப்பட்டுவிட்டது.

மற்ற ராக்கெட்டுகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. முக்கியமாக, பிஎஸ்எல்வி ராக்கெட் மூலமாக மட்டும் 54 முறை பல்வேறு செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை இஸ்ரோ அண்மையில் உருவாக்கியது. 500 கிலோவுக்கும் குறைவான எடை கொண்ட செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு வசதியாக அந்த வகை ராக்கெட் உருவாக்கப்பட்டது. முதல் எஸ்எஸ்எல்வி ராக்கெட் கடந்த ஆண்டு ஆகஸ்டில் விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், அதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயற்கைக்கோள்களைத் திட்டமிட்ட சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்த முடியாமல் போனது.



அதையடுத்து, எஸ்எஸ்எல்வி ராக்கெட் கடந்த பிப்ரவரியில் மீண்டும் செலுத்தப்பட்டது. அப்போது, இஓஎஸ்-07 செயற்கைக்கோள், பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆசாதிசாட்-2 செயற்கைக்கோள், அமெரிக்க நிறுவனத்தின் ஜானஸ்-1 செயற்கைக்கோள் ஆகியவற்றை எஸ்எஸ்எல்வி வெற்றிகரமாக நிலைநிறுத்தியது.

10 முதல் 100 கிலோ வரை எடை கொண்ட நானோ, மைக்ரோ அளவிலான செயற்கைக்கோள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கில் எஸ்எஸ்எல்வி செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை முற்றிலும் தனியாரிடம் ஒப்படைக்க இஸ்ரோ முடிவெடுத்துள்ளது. எஸ்எஸ்எல்வி ராக்கெட்டின் தயாரிப்பு மட்டுமல்லாமல், அதன் செயல்பாடு உள்ளிட்டவற்றை நிர்வகிக்கும் பொறுப்பையும் தனியாரிடம் வழங்கவுள்ளதாக இஸ்ரோ உயரதிகாரி தெரிவித்தார். ஏலத்தை நடத்தி தனியார் நிறுவனத்திடம் எஸ்எஸ்எல்வி ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் விண்வெளி ஆராய்ச்சிகளில் இஸ்ரோ முன்னிலை வகித்து வருகிறது. ஆனால், இந்திய விண்வெளித் துறையில் இதுவரை இஸ்ரோவே அதிக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. விண்வெளித் துறையில் தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் காரணமாக, விண்வெளி ஆராய்ச்சி சார்ந்த 100-க்கும் அதிகமான புத்தொழில் நிறுவனங்கள் நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

தற்போது தனியார் பங்களிப்பை மேலும் அதிகரிக்கும் நோக்கில் எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை தனியாரிடம் இஸ்ரோ ஒப்படைக்கவுள்ளது.

# புதிய துறைகளில் ஒத்துழைப்பு: இந்தியா, தான்சானியா முடிவு

**டார் எஸ் சலாம், ஜூலை 9:** இந்தியா, தான்சானியா இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த புதிய துறைகளில் ஒத்துழைக்க இருநாடுகளும் தீர்மானித்துள்ளன.

மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் 2 நாள் பயணமாக தான்சானியா சென்றார். அந்நாட்டுத் தலைநகர் டார் எஸ் சலாமில் இந்தியா-தான்சானியா கூட்டு ஆணையத்தின் 10-ஆவது கூட்டம் சனிக்கிழமை நடைபெற்ற நிலையில், அந்தக் கூட்டத்தில் தான்சானியா வெளியுறவுத் துறை அமைச்சர் ஸ்டெர்கோமெனா டாக்ஸை ஜெய்சங்கர் சந்தித்தார்.

இதைத்தொடர்ந்து அமைச்சர் ஜெய்சங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கூட்டு ஆணையக் கூட்டம் ஆக்கபூர்வமாக அமைந்தது. எந்தெந்த துறைகளில் இருநாடுகளும் இணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது? ஏற்கெனவே இருநாடுகளும் ஒத்துழைத்து வரும் துறைகளில் எவ்வாறு ஒத்துழைப்பை ஆழமாக்குவது என்பது குறித்து ஆலோசிக்கும் வாய்ப்பை இந்தக் கூட்டம் வழங்கியது.




தான்சானியா வெளியுறவு அமைச்சர் ஸ்டெர்கோமெனா டாக்ஸை டார் எஸ் சலாம் நகரில் சந்தித்துப் பேசிய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

சுகாதாரம், வேளாண்மை, பாதுகாப்பு, கல்வி போன்ற துறைகள் மூலம் இருதரப்பு உறவுகளை மேம்படுத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அவை இருநாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைப்பதற்கான புதிய துறைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

# சவால்களை சமாளிக்குமா நேட்டோ?

உக்ரைன்-ரஷியா போர் தொடங்கி 500 நாள்களைக் கடந்துவிட்டது. அந்தப் போரானது உலகம் முழுவதும் தொடர்ந்து பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. கூடிய விரைவில் போர் முடிவுக்கு வருவதற்கான எந்தவித அறிகுறியும் தென்படவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையேயான போருக்கு முக்கியக் காரணம் 'நேட்டோ'. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்தக் கூட்டமைப்பானது (நேட்டோ) பனிப்போர் காலத்தில் ரஷியாவுக்கு எதிராக மேற்கத்திய நாடுகளால் 1949-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ரஷியாவின் அண்டை நாடான உக்ரைனை நேட்டோவில் இணைப்பது தொடர்பான பிரச்னையே போருக்கு அடிப்படை.

போரில் எளிதில் வென்று, உக்ரைனை கைப்பற்றிவிடலாம் என்ற ரஷிய அதிபர் விளாதிமீர் புதினின் எண்ணம், நேட்டோ கூட்டமைப்பால் பலிக்காமல் போனது. உக்ரைனுக்கு நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் தொடர்ந்து ராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன. அதனால், வலிமையான ரஷிய ராணுவத்துக்கு ஈடுகொடுத்து உக்ரைன் வீரர்கள் தொடர்ந்து போரிட்டு வருகின்றனர்.

இத்தகைய சூழலில், நேட்டோ நாடுகளின் மாநாடு லிதுவேனியா தலைநகர் வில்னியஸ் நகரில் ஜூலை 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. உக்ரைன்-ரஷியா போர் உள்பட பல்வேறு சவால்களுக்குத் தீர்வுகாண வேண்டிய கட்டாயத்தில் நேட்டோ நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடவுள்ளனர்.



**உக்ரைனுக்கு உறுப்பினர் அந்தஸ்து:** நேட்டோ நாடுகளுக்கு முக்கிய பிரச்னையாக இருப்பது, உக்ரைனை கூட்டமைப்புக்குள் இணைப்பது. உக்ரைன் நேட்டோவில் இணைக்கப்படும் என 2008-ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே உக்ரைனின் கிரீமியா பகுதியை 2014-ஆம் ஆண்டு ரஷியா ஆக்கிரமித்தது. உக்ரைனை நேட்டோவில் இணைப்பதற்கான முயற்சிகள் தீவிரமடைந்ததால், அதிபர் புதின் உக்ரைன் மீது 'ராணுவ நடவடிக்கையை' கடந்த ஆண்டு தீவிரப்படுத்தினார்.

இந்நிலையில், நேட்டோவில் இடம்பெற்றுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளான எஸ்டோனியா, லாத்வியா, லிதுவேனியா, போலந்து உள்ளிட்டவை உக்ரைனை கூட்டமைப்பில் இணைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றன. அதுவே இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாகவும், ரஷியாவுக்கு உரிய பதிலடியாகவும் இருக்கும் என அந்நாடுகள் தெரிவிக்கின்றன.

ஆனால், மற்ற நேட்டோ நாடுகள் உக்ரைனை கூட்டமைப்பில் இணைக்க வேண்டாம் என்றும், அவ்வாறு இணைத்தால் அது தொடர்ந்து பல்வேறு பிரச்னைகளுக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கின்றன. உக்ரைனுக்கான ராணுவ உதவிகளை மட்டும் தொடர்ந்து வழங்கலாம் என்பது அந்நாடுகளின் வாதம்.



பிரஸல்ஸில் உள்ள நேட்டோ தலைமையகம்.

உக்ரைனை நேட்டோவில் இணைப்பது தொடர்பாக உறுதியான முடிவெடுக்கும் வரை போர் முடிவுக்கு வராது என்றே தெரிகிறது.

ஆண்டுக்கணக்கில் உக்ரைன் போர் நீடிப்பது, பொருளாதார ரீதியில் உலக நாடுகளை வெகுவாக பாதிக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

**ஆபத்துமிக்க ஆயுதங்கள்:** உக்ரைனுக்கு நேட்டோ நாடுகள் தொடர்ந்து ஆயுதங்களை வழங்கி வருகின்றன. அதிக ஆபத்துமிக்க 'கிளஸ்டர்' வகை வெடிகுண்டுகளை உக்ரைனுக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்கா அண்மையில் அறிவித்தது. அதை கவனமாக பயன்படுத்தவுள்ளதாக உக்ரைன் வாக்குறுதி அளித்துள்ளது.

எனினும், அத்தகைய வெடிகுண்டுகள் உக்ரைனுக்கு வழங்கப்படுவதற்கு நேட்டோ உறுப்பு நாடான இத்தாலி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

**நேட்டோவின் தலைவர் பொறுப்பு:** கூட்டமைப்புக்கான தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலும் நாடுகளிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. புதிய நேட்டோ தலைவரை ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக, தற்போதைய தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்கின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நேட்டோ நீட்டித்துள்ளது.

கடந்த 2014-ஆம் ஆண்டுமுதல் அவரே தலைவர் பொறுப்பை வகித்துவருகிறார். இத்துடன் 4 முறை அவரது பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க் பிரதமர் மேட் பிரெடெரிக்சன், நேட்டோ தலைவருக்கான போட்டியில் முன்னிலை வகிக்கிறார்.

ஆனால், நார்டிக் நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து இரு முறை தலைவர் பதவியை வகித்துள்ளதால், தற்போது பால்டிக் கடல் பகுதியைச் சேர்ந்த நாடுகளுக்குத் தலைவர் பதவி வழங்க வேண்டும் என போலந்து வலியுறுத்தி வருகிறது. அதே வேளையில், பால்டிக் கடல் பகுதி நாடுகள் உக்ரைனுக்கு தீவிர ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவை.

அந்நாடுகளைச் சேர்ந்தவர் நேட்டோ தலைவரானால், ரஷியாவுக்கு எதிரான நேட்டோவின் அணுகுமுறை தீவிரமடைய வாய்ப்புள்ளதாக மற்ற நாடுகள் தெரிவிக்கின்றன.

எனவே, புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் தொடர்ந்து முட்டுக்கட்டை நிலவி வருகிறது.

**ஸ்வீடனுக்கான உறுப்பினர் அந்தஸ்து:** உக்ரைன் போருக்குப் பிறகு ஃபின்லாந்தும், ஸ்வீடனும் தங்களது அணிசேராக் கொள்கையை விலக்கிவிட்டு, நேட்டோவில் இணைய முடிவெடுத்தன. நேட்டோவின் 31-ஆவது உறுப்பினராக ஃபின்லாந்து இணைந்துவிட்டது.

ஆனால், ஸ்வீடன் நேட்டோவில் இணைய மற்றொரு நேட்டோ உறுப்பினரான துருக்கி பெரும் தடையாக உள்ளது.

குறிப்பிட்ட நாடு நேட்டோவில் இணைவதற்கு மற்ற அனைத்து உறுப்பு நாடுகளின் ஒப்புதல் அவசியம். இஸ்லாமிய மதத்துக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்கவில்லை என்றும், பயங்கரவாத குர்து இனக் குழுக்களை ஆதரிப்பதாகவும் ஸ்வீடன் மீது குற்றஞ்சாட்டி வரும் துருக்கி, அந்நாட்டை நேட்டோவில் இணைக்க எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.



நேட்டோ தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க்

அண்மையில் ஸ்வீடனில் நடைபெற்ற குர்-ஆன் எரிப்புப் போராட்டமானது, இரு நாடுகளுக்கு இடையேயான மனக்கசப்பை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. அதனால், நடப்பு மாநாட்டிலும் ஸ்வீடனை நேட்டோவில் இணைப்பது தொடர்பாக எந்தவித இறுதி முடிவும் எடுக்கப்படாது என்றே தெரிகிறது.

**ராணுவச் செலவினம்:** நேட்டோவில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு நாடும் ராணுவச் செலவினத்தை, தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பில் 2 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த இலக்கை இன்னும் பல நாடுகள் அடையவில்லை. இந்த விவகாரமும் மாநாட்டின்போது முக்கியப் பிரச்னையாக எழுப்பப்பட வாய்ப்புள்ளது.

**வாய்ப்பளிக்கக் கூடாது:** நேட்டோ நாடுகளிடையே பல்வேறு விவகாரங்களில் கருத்து மோதல் நிலவி வருகிறது. இத்தகைய மோதல்கள் ரஷிய அதிபர் புதினுக்கே வாய்ப்புகளை வழங்கும் என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

அதைக் கருத்தில்கொண்டு, வேறுபாடுகளைக் களைந்து அனைத்துப் பிரச்னைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலமாக ஒருமித்த தீர்வை நேட்டோ நாடுகள் எட்ட வேண்டும்.

ரஷியாவை எதிர்க்க விரும்பினால், நேட்டோ நாடுகள் முதலில் தங்களுக்குள் ஒன்றுபட வேண்டும். இல்லையெனில் ரஷியாவின் கை ஓங்கும்.

அதை அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ நாடுகள் அனுமதிக்காது என எதிர்பார்க்கலாம்.





–சுரேந்தர் ரவி

# பிரியன்ஷ், அதிதிக்கு தங்கம்

**லிமெரிக், ஜூலை 9:** அயர்லாந்தில் நடைபெறும் இளையோர் உலக வில் வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் பிரியன்ஷ், அதிதி சுவாமி ஆகியோர் தங்களது பிரிவில் தங்கப் பதக்கம் வென்று சாம்பியனாகினர்.



பிரியன்ஷ்



அதிதி

21 வயதுக்கு உள்பட ஆடவர் தனிநபர் காம்பவுண்ட் இறுதிச்சுற்றில் பிரியன்ஷ் 147-141 என்ற புள்ளிகள் கணக்கில் ஸ்லோவேனியாவின் அல்ஜாஸ் பிரெங்கை வென்று முதலிடம் பிடித்தார். அதே போல், 18 வயதுக்கு உள்பட்ட மகளிர் தனிநபர் காம்பவுண்ட் இறுதிச்சுற்றில் அதிதி சுவாமி 142-136 என்ற கணக்கில் அமெரிக்காவின் லீன் டிரேக்கை சாய்த்து பட்டத்தை தட்டிச் சென்றார்.

அதே பிரிவில் வெண்கலப் பதக்கச் சுற்றில் இந்தியாவின் அவ்னீத் கௌர் - பிரிட்டனின் ஹாலி பௌல்டன் மோதினர். முடிவில் இருவரும் 138 புள்ளிகளுடன் சமநிலையில் இருக்க, வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட ஷூட் ஆஃபில் பௌல்டன் 10-9 என்ற கணக்கில் வென்றார்.

இப்போட்டியில் இத்துடன் இந்தியா, 5 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 9 பதக்கங்கள் வென்றுள்ளது.

# 150 பழங்காலப் பொருள்கள் அமெரிக்காவிடமிருந்து பெறப்படும்

## மத்திய கலாசார துறைச் செயலர்

**ஹம்பி, ஜூலை 9:** இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட சுமார் 150 பழங்காலப் பொருள்கள் அடுத்த 6 மாதங்களில் அமெரிக்காவிடமிருந்து திரும்பப் பெறப்படும் என மத்திய கலாசார துறைச் செயலர் கோவிந்த் மோகன் தெரிவித்துள்ளார்.

கலாசாரம் தொடர்பான ஜி20 செயற்குழுவின் 3-ஆவது கூட்டம் கர்நாடகத்தின் ஹம்பியில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

அதற்கு முன் கலாசாரத் துறைச் செயலர் கோவிந்த் மோகன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "கலாசார சொத்துகளை சட்டவிரோதமாகக் கடத்துவதற்கு 1970-ஆம் ஆண்டில் கையொப்பமான ஒப்பந்தம் தடைவிதிக்கிறது.

அந்த ஒப்பந்தத்தில் அனைத்து ஜி20 நாடுகளும் உறுப்பினர்களாக இணைய வேண்டுமென இந்தியா வலியுறுத்தி வருகிறது.

அந்த ஒப்பந்தத்தில் ஜி20 உறுப்பு நாடுகள் கையொப்பமிடும்பட்சத்தில் இந்தியா அதிக பலன்களைப் பெறும். இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட பழங்காலப் பொருள்களை மீண்டும் தாயகத்துக்குக் கொண்டுவர முடியும். இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையையும் இந்தியா மேற்கொண்டு வருகிறது.

பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டபோதும் கலாசாரப் பொருள்களைத் திரும்பப் பெறுவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அடுத்த 6 மாதங்களில் அமெரிக்காவில் இருந்து சுமார் 150 பழங்காலப் பொருள்கள் திரும்பப் பெறப்படும்.

பிரிட்டனிடமிருந்தும் பழங்காலப் பொருள்களை இந்தியா திரும்பப் பெற்றுள்ளது.

அதேபோல், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் உள்ள இந்தியப் பழங்காலப் பொருள்களைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கலாசார சொத்துகளைப் பாதுகாக்கும் விவகாரத்தில் அனைத்து நாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன" என்றார்.

# சூடானில் மீண்டும் முழு அளவிலான உள்நாட்டுப் போர்

## ஐ.நா. பொதுச் செயலர் எச்சரிக்கை

**கெய்ரோ, ஜூலை 9:** சூடானில் ராணுவம், துணை ராணுவத்துக்கும் இடையே மீண்டும் முழு அளவிலான உள்நாட்டுப் போர் ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக என ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்துள்ளார்.

தலைநகர் கார்ட்டூம் அருகேயுள்ள ஆம்டர்மன் நகரில் சனிக்கிழமை நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 22 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் ராணுவத் தளபதி ஜெனரல் அப்தெல்-ஃபட்டா புர்கானுக்கும், ஆர்எஸ்எஃப் எனப்படும் துணை ராணுவப் பிரிவின் தலைவர் ஜெனரல் முகமது ஹம்டான் டகாலோவுக்கும் இடையே அதிகாரப் போட்டி நிலவி வருகிறது. இதன் காரணமாக கடந்த மாத ஏப்ரல் மத்தியில் இரு ராணுவப் பிரிவினருக்கும் இடையே கடும் மோதல் தொடங்கியது. தலைநகர் கார்ட்டூம் உள்ளிட்ட நகரங்களில் இரு படையினரும் துப்பாக்கிச் சண்டையிலும், பீரங்கித் தாக்குதலிலும் ஈடுபட்டனர்.



சூடான் தலைநகர் கார்ட்டூமில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலால் எழுந்த கரும் புகை. (கோப்புப் படம்)

இந்த மோதலில் பொதுமக்கள் 3,000 பேர் கொல்லப்பட்டனர். 6,000 பேர் காயமடைந்ததாக சூடான் சுகாதார அமைச்சர் ஹெய்தம் முகமது இப்ராகிம் கடந்த மாதம் தெரிவித்தார். 29 லட்சம் பேர் பாதுகாப்பு கருதி தங்களது வீடுகளைவிட்டு வெளியேறி சூடானின் பிற பகுதிகளிலோ அண்டை நாடுகளிலோ தஞ்சமடைந்ததாக ஐ.நா. தெரிவித்தது.

இந்நிலையில், ஆம்டர்மன் நகரில் சனிக்கிழமை நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் பொது மக்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ராணுவமே காரணம் என துணை ராணுவப் பிரிவு தலைவர் குற்றஞ்சாட்டினார். ஆனால், ஆம்டர்மன் நகரில் வான்வழித் தாக்குதல் எதையும் நடத்தவில்லை என ராணுவம் மறுத்துள்ளது.

தலைநகர் கார்ட்டூமிலும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடும் மோதல் நிகழ்ந்ததாக பொது மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்திருப்பதாவது: ஆம்டர்மன் நகரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல் கண்டிக்கத் தக்கது.

சூடானின் டார்ஃபுர் பிராந்தியத்தில் நடைபெற்று வரும் மிக மோசமான வன்முறையையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதே நிலை நீடித்தால் சூடானில் மீண்டும் முழு அளவிலான உள்நாட்டுப் போர் ஏற்படக் கூடும் என அவர் கூறியுள்ளார்.



டார்ஃபுர் பிராந்தியத்தில் அரபு அல்லாத இனக் குழுக்களின் மீது 2000-ஆவது ஆண்டில் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

தற்போது டார்ஃபுர் பிராந்தியம் துணை ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

துணை ராணுவம் தற்போது நடத்திவரும் தாக்குதலால் கடந்த கால இனப் படுகொலையை நோக்கி டார்ஃபுர் பிராந்தியம் திரும்பி வருவதாக அதன் ஆளுநர் மினி ஆர்கோ மினாவி அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.